

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாவில் அரசின் நமக்குநாமே திட்டத்தில் அரசு நிதி மற்றும் சன் டிவி பங்களிப்புடன் சுமார் ரூ.1.66 கோடியில் வாலாஜா வட்டார வளர்ச்சி கல்வி அலுவலக கட்டிடம் கட்டநிதி பெற்று தந்ததற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்திக்கு வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷாவெங்கட் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.சிவஞானம் மற்றும் ஆசிரியர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

# ‘டிட்டோ ஜாக்’ கோரிக்கைகள் ஏற்பு!

## தொடக்கக் கல்வி இயக்குநர் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முடிவு!

சென்னை, செப். 8 -

10.09.2024 அன்று 31 அம்சக்கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் ஆசிரியர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டம் மாவட்ட தலைநகரங்களில் திட்ட மிட்டுள்ளது சார்பாக 06.09.2024 அன்று தொடக்கக் கல்வி இயக்குநர் தலைமையில் டிட்டோஜாக் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

ஏற்கனவே, டிட்டோஜாக் சார்பில் 30 அம்சக்கோரிக்கைகளை வலியுறுத்தி 13.10.2023 அன்று சென்னையில் பேராசிரியர் அன்பழகனார் ஒருங்கிணைந்த கல்வி வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திட முடிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, 12.10.2023 அன்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தலைமையில், பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் 12 அம்சக்கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும், டிட்டோஜாக் அமைப்பு 31 அம்சக்கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி ஜூலை 29, 30, 31 ஆகிய தேதிகளில் மூன்று நாள் டி.பி.ஐ. வளாக முற்றுகைப் போராட்ட அறிவிப்பினை தொடர்ந்து பள்ளிக் கல்வித்துறைச் செயலர் மற்றும் இயக்குநர்களுடன் 22.07.2024 மற்றும் 30.07.2024 ஆகிய தேதிகளில் தலைமைச் செயலகத்தில் இரண்டு கட்ட பேச்சுவார்த்தை நடத்தப் பட்டது.

இதன் தொடர்ச்சியாக 06.09.2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கீழ்க்கண்ட விவரங்கள் டிட்டோஜாக் பிரதிநிதிகளிடம் கோரிக்கையின் தற்போதைய நிலை சார்ந்து தெரிவிக்கப்பட்டது.

ஏற்கப்பட்ட கோரிக்கைகள்

1. கல்வி மேலாண்மை தகவல் மையம் (EMIS) சார்ந்த பதிவுகள் ஆசிரியர்களை வைத்து மேற்கொள்ள கூடாது என்ற கோரிக்கையை ஏற்று இதற்கென்று தனியாக மாநிலத்திலுள்ள 6000ற்கும் மேற்பட்ட நடுநிலைப்பள்ளிகளில் Administrator cum Instructorகள் பணியமர்த்தப் பட்டுள்ளனர். இவர்கள் அருகாமையில் உள்ள தொடக்கப் பள்ளிகளிலும் EMIS சார்ந்த அனைத்துப் பதிவுகளையும் குறிப்பாக மாணவர்களுக்கு வழங்கப்படும் அரசு நலத்திட்டங்களான பாடப்புத்தகம், பாடக்குறிப்பேடு, காலணி, காலேந்திகள், காலுறைகள், சீருடைகள், வண்ண பென்சில்கள், வண்ணத்தீட்டிகள், புவியியல் வரைபடம் ஆங்கிள் பூட், கம்பளிச்சட்டை, ரெயின்கோட், புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி மாணவர்களின் வருகைப்பதிவேடு ஆகிய பதிவுகள் இவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. தமிழகத்தில் எண்ணும் எழுத்தும் திட்டத்தில் பெரும்பாலான இணைய வழிச் செயல்பாடுகள் குறைக்கப் பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளை எளிதாக்குவதற்கு ஏதுவாக 29344 பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புகளை கையாளும் ஆசிரியர்களுக்கு கையடக்க கணினிகள் (TAB) வழங்கப்பட்டு கற்றல்கற்பித்தல் பணிகள் கற்றல் அறிவுத்திறனை சோதிக்க மாதம் ஒரு முறை 1 ஆம் வகுப்பு முதல் 3 ஆம் வகுப்பு வரை வெள்ளிக் கிழமைகளிலும் 4 மற்றும் 5 ஆம் வகுப்புகளுக்கு புதன் கிழமைகளிலும் வளர்அறி மதிப்பீட்டுப் பதிவுகள் (Assesment) மேற்கொள்ளப்படுகிறது.

3. நடைமுறையில் உள்ள அரசாணையில் மாதமொரு முறை SMC கூட்டம் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது, பள்ளியின் நலனுக்கு தேவையின் அடிப்படையில் மட்டுமே SMC கூட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. பயிற்சிகளுக்கு ஆசிரியர்களை கருத்தாளர்களாகப் பயன்படுத்தக் கூடாது என்ற கோரிக்கையை ஏற்று வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன விரிவுரையாளர் களுடன் அனுபவம் மிகுந்த ஒரு சில விருப்பமுள்ள ஆசிரியர்களை மட்டுமே கருத்தாளர்களாக பயன்படுத்தப்பட்டு வருவது தெரிவிக்கப் பட்டது.

5. 2016, 2017, 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜாக்டோஜியோ போராட்டத்தில் பங்கேற்ற ஆசிரியர்களின் மீது மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கைகள் இருவேறு அரசாணைகள் மூலம் போராட்ட காலம் மற்றும் தற்காலிக பணிநீக்க காலம் பணிக்காலமாக முறைப் படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் காவல்துறையில் நிலுவையிலுள்ள முதல் தகவல் அறிக்கையில் (FIR) உள்ள ஆசிரியர்களின் பெயர்களை நீக்கம் செய்ய மாவட்டக் கல்வி அலுவலர்களிடமிருந்து (தொடக்கக் கல்வி) பெயர் பட்டியல் மற்றும் சார்ந்த ஆசிரியர் சங்க பிரதிநிதிகளால் வழங்கப்படும் பட்டியலை கொண்டு நிலுவையிலுள்ள காவல்துறை முதல் தகவல் அறிக்கை நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6. தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ரூ.5400 தர ஊதியம் பெற்றவர்களுக்கு அரசு கடிதம் எண். 11100/தொக1(1)/20231, பள்ளிக்கல்வித்துறை நாள். 15.12.2023ன்படி தெளிவுரைகள் தெரிவித்துள்ளதின்படி தலைமை ஆசிரியர்கள் பணி மூப்பு தன்மையால் பட்டதாரி / நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற இயலாதவர்கள் தேர்வுநிலை / சிறப்பு நிலை தர ஊதியம் முறையே ரூ.1560039100 தர ஊதியம் 5400 மற்றும் ரூ.1560039100 தர ஊதியம் 5700 என ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு பின்னர் பி.ஏ.,/ பி.எஸ்.சி., / பி.லிட், இளங்கலை பட்டத்துடன் பி.எட் பட்டய கல்வித் தகுதியும் பெற்று பட்டதாரி/ நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்றுள்ளதால் சாதாரண நிலையில் ரூ.930034800 தர ஊதியம் 4500 தேர்வுநிலையில் 930034800 தர ஊதியம் 4600 பட்டதாரி ஆசிரியர் ரூ. 930034800 தர ஊதியம் 4700 (நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர்) சிறப்பு நிலையில் ரூ.1560039100 தர ஊதியம் 5700 என தெரிவித்துள்ளவாறு அ.க.எண்.63305/ஊ.பி/20101, நிதித்துறை நாள். 08.11.2010ன் பத்தி 4(i)ன்படி தேர்வுநிலை/ சிறப்புநிலையில் முறையே அப்பணியிடத்தின் முதல் மற்றும் இரண்டாம் நிலை பதவி உயர்வு பணியிடங்களில் சாதாரண நிலை ஊதிய விகிதத்திற்கு மட்டுப் படுத்தப்பட்டு நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என தெளிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் பேச்சு வார்த்தையின் போது தணிக்கைத்துறைக்கு விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்திட உரிய அறிவுரைகள் வழங்கப்படும் என தெரிவிக் கப்பட்டது.

### கருத்துக்கேட்பு நிலுவை

7. இடைநிலை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள ஊதிய முரண்பாடுகளை களைய மூவர் குழு ஒன்றை அமைத்து அரசாணை வெளியிட்டுள்ளது. இக்குழு ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் 10.03.2023, 14.06.2023 மற்றும் 01.11.2023 ஆகிய நாட்களில் மூன்று சுற்று கருத்து கேட்புக் கூட்டங்களை நடத்தியுள்ளது. ஆசிரியர் கூட்டமைப்பின் எஞ்சியுள்ளவர்களுக்கான கூட்டம் விரைவில் நடத்தப்படும்.

### அரசின் பரிசீலனையில் உள்ளது

8. B.Lit தமிழ் முடித்து நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியராகப் பணிபுரிபவர்களுக்கு பி.எட்., உயர் கல்வி தகுதி தேர்ச்சி பெற்று உயர் கல்வித் தகுதிக்கு ஊக்க ஊதியம் பெற்றவர்களுக்கு தணிக்கைத்தடை காரணமாக நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி, நிறுத்தப்பட்ட ஊக்க ஊதியம் சார்பாக கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

9. உயர்கல்வி பயின்ற 4500 பேருக்கு பின்னேற்பு அனுமதி (பதவி உயர்வுக்கு மட்டும்) வழங்கிடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவை

10. அரசு உதவிபெறும் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்ட, பருவகால ஊதிய உயர்வு இன்றி Entry Pay மட்டும் பெற்று வரும் 1500 ஆசிரியர்களுக்கு நியமனம் முதல், ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிப்பது குறித்து மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கின் இறுதி தீர்ப்பாணையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. பதவி உயர்வுக்கு ஆசிரியர் தகுதித்தேர்வு தேவை என்ற தீர்ப்பை எதிர்த்து பணி முன்னுரிமை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கிட தமிழ்நாடு அரசினால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தும் Advocate on record மூலமாக வழக்கினை விரைந்து பட்டியலிட அரசினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பள்ளிக் கல்வித் துறை அரசு செயலர் / இயக்குநர் நேரடியாகச் சென்று இவ்வழக்கினை மாண்பமை உச்சநீதிமன்றத்தில் கேட்புக்கு விரைந்து கொண்டுவர தனித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### தற்போதைய நிலையில் இயலாதது

12. 58 மாவட்டக் கல்வி அலுவலகங்களில் (தொடக்கக் கல்வி) பள்ளி துணை ஆய்வாளர் பணியிடங்கள் தோற்றுவிக்க தற்போதைய நிலையில் தேவை எழவில்லை என தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட கோரிக்கைகள் தவிர்த்து மற்ற கோரிக்கைகள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு தொடக்கக் கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவிற்கு (டிட்டோஜாக்) தெரிவிக்கப்பட்டது.

## இராணிப்பேட்டையில்,

# சன் பவுண்டேசன் சார்பில் ரூ.1.66 கோடியில் வட்டாரகல்வி அலுவலகம்!

## அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்திக்கு நன்றி தெரிவித்த ஆசிரியர்கள்!!

இராணிப்பேட்டை, செப்.8 -

இராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் ரோட்டில் வட்டார கல்வி அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது.

வட்டார அளவில் பணிபுரியும் ஆசிரியர்கள் இந்த அலுவலகத்தை புதுப்பித்து அல்லது புதிதாக அலுவலகம் கட்டி தர வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி முயற்சியால் அரசின் நமக்கு நாமே திட்டத்தில் அரசு நிதி மற்றும் சன் பவுண்டேஷன் பங்களிப்புடன் ரூ.1.66 கோடியில் வாலாஜா வட்டார கல்வி அலுவலகம் கட்ட நிதி பெற்று அதனை வழங்கினார்.

இதற்கு வட்டார அளவில் பணிபுரியும் ஆசிரியர்கள் நீண்ட ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி தந்ததற்காக கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் ஆர். காந்தியை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

அப்போது வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷா வெங்கட் ரமணன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சிவஞானம் மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.

## முதல்வர் முன்னிலையில் – தினந்தோறும் கையெழுத்தாகும் ஒப்பந்தங்களின் பட்டியலைப் பார்த்து

# வயிற்றெரிச்சல்படும் பழனிசாமி - திசை திருப்ப உளறுகிறார்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம்!

**சென்னை, செப்.8–**

**கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–**



கோவில்பட்டியில் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, “சென்னை அசோக் நகர் அரசுப் பள்ளியில் சர்ச்சைக்குரிய வகையில் பேசியவரை, அமைச்சர்களோடு நெருக்கமாக இருந்தாலேயே பள்ளியில் பேச அனுமதித்திருக்கிறார்கள்'' எனக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்.

முதலமைச்சராக இருந்த நீங்கள் ஒரு வி.ஐ.பி.தானே? ஒரு வி.ஐ.பி.யைத் தேடி நிறையப் பேர் பார்க்க வருவார்கள் என்பது அடிப்படை தியரி. அப்படிப் பார்க்க வருகிறவர்கள்

ஒவ்வொருவரின் பின்புலத்தை அலசிப் பார்த்துவிட்டா அனுமதி அளிப்பார்கள்? இது

கூட தெரியாமல் நீங்கள் எப்படி முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தீர்கள்?

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறீர்கள்?

பழனிசாமி முதலமைச்சராக இருந்த போதுதான் கோவை, வேலாண்டிபாளையத்தை சேர்ந்த ஆனந்த் மற்றும் அவருடைய கோஷ்டியினர் கோடிக்கணக்கான புதிய 2 ஆயிரம் கள்ள ரூபாய் நோட்டுகளை அச்சிட்டு 2018-இல் கைதானார்கள். கள்ள நோட்டு கும்பலுடன் திரு. பழனிசாமி இருக்கும் புகைப்படம் வெளியாகி அன்றைக்குச் சந்தி சிரித்தபோது அவர் எங்கே போனார்?

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றிய அதிமுக கவுன்சிலர் ஹரிதரன் கைது செய்யப் பட்டார். அவருக்கு சீட் கொடுத்தது பொதுச் செயலாளர் பழனிசாமிதானே?

“சர்ச்சைக்குரிய வகையில் பேசியவர் பேச்சுக்கு அமைச்சர்கள் பொறுப்பேற்க வேண்டும்” எனச் சொல்லும் பழனிசாமி, ஆனந்த், ஹரிதரன் ஆகியோரது செயல்களுக்கும் பொறுப்பு ஏற்றாரா?

“அதிகாரத்துக்கு என்றுமே நாங்கள் அடிமை இல்லை. எங்களுக்கு மரியாதை, தனித்துவம் உள்ளது” எனப் பெருமை பேசியிருக்கிறார். “அதிகாரத்துக்கு என்றுமே அடிமை இல்லை” என்றால், ஆட்சிக்கு ஆபத்து என்றதும் டெல்லிக்கு ஏன் காவடி தூக்கினீர்கள்?

கட்சிக்காரர்கள் தவறு செய்திருந்தால் அம்மையார் ஜெயலலிதா பொறுப்பில் இருந்து நீக்குவார்; கட்சியை விட்டு கட்டம் கட்டுவார்; எம்.எல்.ஏ. பதவியை எல்லாம் பறித்ததில்லை. ஆனால், ஆட்சிக்கு ஆபத்து என்றதும் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 18 பேரை நீக்கிய நீங்கள் அதிகாரத்துக்கு என்றுமே அடிமை இல்லை என்று சொல்ல நா கூசவில்லையா? தர்மயுத்தம் நடத்திக் கொண்டிருந்த பன்னீர்செல்வத்தை இணைத்துக் கொண்டு, அவருக்குத் துணை முதலமைச்சர் பதவி கொடுத்து ஆட்சியைக் காப்பாற்றவில்லையா? உங்களின் தனித்துவ அடையாளமே பாதம்தாங்கிதானே?

“அருப்புக்கோட்டையில் பெண் டி.எஸ்.பி. மீதான தாக்குதல் போலீஸுக்கே பாதுகாப்பில்லை என்பதை வெளிப்படுத்துகிறது” என பழனிசாமி புலம்பியிருக்கிறார். பழனிசாமி ஆட்சியில் நெடுஞ்சாலைகளில் இருந்த மதுக்கடைகளை மூடிவிட்டு மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் கடைகளை அமைக்க முயன்றபோது திருப்பூர், சாமளாபுரத்தில் போராடிய பெண்கள் போலீசாரால் தாக்கப்பட்டனர். ஆனால், ’சாமளாபுரத்தில் பெண்கள்தான் போலீஸை தாக்கினார்கள். தமிழகத்தில் போராட்டங்கள் நடத்துவது பேஷனாகி விட்டது’ என்று அன்றைக்கு வியாக்கியானம் பேசியவர் தான் பழனிச்சாமி.

கோகுல்ராஜ் ஆணவக் கொலை வழக்கில், திருச்செங்கோடு டி.எஸ்.பி. விஷ்ணுப்ரியாவுக்கு அழுத்தம் கொடுத்து அவரை தற்கொலைக்கு தள்ளியது யார்?

உங்கள் ஆட்சியில் போலீஸாரால் பெண்களுக்கு மட்டுமல்ல, போலீஸாரால் போலீஸுக்கே பாதுகாப்பில்லாமல் போனது எல்லாம் ‘செலக்டிவ் அம்னீஷியா’ போல் மறந்துவிட்டதா?

“உடல்நிலை சரியில்லாத காரணத்தால் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளிநாடு சென்றிருக்கிறார். அதை மறைக்கவே தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக வெளிநாடு சென்றிருப்பதாகக் கூறுகிறார்கள்” என உளறிக் கொட்டியிருக்கிறார். அம்மையார் ஜெயலலிதா உடல்நலம் சரியில்லாமல் அப்போலோவில் இருந்த போது ஆரம்பித்த உளறல்களை இன்னுமா நீங்கள் நிறுத்தவில்லை?

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காவேரி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட போது அவரது உடல்நிலை குறித்து அவ்வப்போது தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. புகைப்படங்களும் வெளியிட்டோம். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறு சிகிச்சை எடுத்துக்கொண்டாலும் அது தொடர்பான அறிவிப்புகள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டிருப்பதை இன்றும் இணையத்தில் தேடிப் படிக்கலாம்.

ஜெயலலிதாவை வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளித்துக் காப்பாற்ற வக்கில்லாதவர்கள் எல்லாம் தொழில் முதலீட்டை ஈர்க்க சென்றிருக்கும் முதலமைச்சரைப் பற்றி பேசாமல் இருப்பதே நல்லது.

75 நாட்கள் அப்போலோவில் ஜெயலலிதா சிகிச்சையில் இருந்தபோது ஒரு போட்டோவை கூட வெளியிடாதவர்கள், முதலமைச்சரின் உடல்நிலையைப் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா? ‘கண்ணை நம்பாதே, உன்னை ஏமாற்றும், நீ காணும் தோற்றம், உண்மை இல்லாதது அறிவை நீ நம்பு, உள்ளம் தெளிவாகும்’ என எம்.ஜி.ஆர் பாடிவிட்டு போனது பழனிசாமிக்குத் தான்!

“இட்லி சாப்பிட்டார்கள்… வார்டுக்கு மாறிவிட்டார்கள்… விரைவில் வீடு திரும்புவார்கள்” என அ.தி.மு.க நிர்வாகிகளும் அமைச்சர்களும் பொய் பூக்களைக் கோத்து, கதை மாலையைக் கட்டியதை போல எங்களுக்குக் கட்ட தெரியாது. தி.மு.க. எப்போதுமே வெளிப்படையான இயக்கம். திரைமறைவில் செயல்படுவதுதான் அ.தி.மு.க.வின் கொள்கை.

‘ஜெயலலிதா மயக்கமான பின்னர் நடந்த நிகழ்வுகள் அனைத்தும் ரகசியமாக்கப்பட்டன.ஆஞ்சியோ பரிந்துரைக்கப்பட்டும், அதனை அப்போலோ வழங்காத வகையில் சசிகலா உள்ளிட்ட 5 பேர் திட்டமிட்டுச் செயல்பட்டனர். முதல்வர் உயிரைக் காப்பாற்றி இருக்கலாம். அவர் இறந்த தேதியே தவறு. ஜெயலலிதா இறப்பை மறைத்து, அறிவிப்பைத் தாமதப்படுத்தத் தந்திர நடவடிக்கை’ என்றெல்லாம் ஆறுமுகசாமி ஆணைய அறிக்கையில் ஜெயலலிதாவின் மர்ம மரணத்தை அக்கு வேறாகப் பிரித்தார்கள். காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா வேலாள் முகத்த களிறு என்ற திருவள்ளுவரின் குரலை மேற்கோள் காட்டி, வேல் ஏந்திய வீரரைக் கோர்த்தெடுத்த கொம்பு உடைய யானையையும், கால் ஆழும் சேற்று நிலத்தில் அகப்பட்டபோது நரிகள் கொன்றுவிடும்'' என நீதிபதி ஆறுமுகசாமி குறிப்பிட்டார். அந்த நரிகள் கூட்டம் எங்கள் தலைவரின் உடல்நிலையைப் பற்றிப் பேசத் தகுதி இருக்கிறதா?

தினந்தோறும் கையெழுத்தாகும் ஒப்பந்தங்களின் பட்டியலைப் பார்த்து வயிற்றெரிச்சல் படும் பழனிசாமி அதை திசைதிருப்ப ஏதேதோ பேசுகிறார். அவருக்கு வந்திருக்கும் பொறாமை நோய்க்கு எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. தனது ஆட்சியில் தமிழ்நாட்டை அனைத்து துறையிலும் தரை மட்டத்துக்கு இறக்கி பாழ்படுத்திய பழனிசாமிக்கு யாரையும் குறை சொல்லும் தகுதியோ அருகதையோ கிடையாது. தானும் இருக்கிறேன் என்பதைக் காட்ட நடத்தும் பேட்டி நாடகத்தை நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் எல்லாபுரம் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் கோடுவெளி தங்கம் முரளி தலைமையில் தாமரைபாக்கத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, கே.ஜெ.ரமேஷ் மா.ராஜ், வெங்கல் வி.ஜெ.சீனிவாசன், கோடுவேளி எம்.குமார், த.எத்திராஜ், டி.தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், பி.ஜி.முனுசாமி, டி.பாஸ்கர், இ.சுப்பிரமணி, வி.நாகலிங்கம், உமாசீனிவாசன், லோகநாதன், வெங்கல் ஜி.பாஸ்கர், கே.ஜி.அன்பு, இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், வி.தியாகராஜன், ஸ்ரீதர், எம்.நாராயணசாமி, பி.சீனிவாசன், ஏ.சுப்பிரமணி, எஸ்.ஆளவந்தான், கே.சுரேஷ்குமார், வி.தியாகராஜன், ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமாமகேஸ்வரன், அக்னி ராஜேஷ், ஆர்.ரஜினி, ஏ.கே.எம்.சரத்குமார், கே.என்.சரத் குமார், என்.அச்சுதன், எம்.ரஞ்சித், ரகு, என்.சூரியமுத்து, மேதா.தமிழ்மூர்த்தி, டி.வாலீஸ்வரன், எஸ்.ரகு, விஜயகுமார், கே.கிரானசுந்தரம், எம்.கணேசன், எஸ்.துளசிராமன், காரணி எம்.சத்யா, வி.செல்வம், வேலன், செம்மேடு செல்வம், உள்பட பலர் உள்ளனர்.

## மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தலைமையில்! மயிலை 126வது வட்ட

# இளைஞரணி அமைப்பாளர் ர.கணேஷ் திருமண வரவேற்பு விழா! அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

## எஸ். முரளி - நந்தனம் கி.மதி எம்.சி. - ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. - கோ கண்ணன் முன்னிலை!

சென்னை, செப். 8

தென் மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 126வது வட்ட கழக செயலாளர் கோ.கண்ணன் இல்ல திருமண விழா - வட்ட இளைஞரணி அமைப்பாளர் ர.கணேஷ் திருமண வரவேற்பு விழா இன்று (08-09-2024, ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் மந்தைவெளியில் அமைந்துள்ள ஸ்ரீமதி நாராயணி அம்மாள் கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இதில் சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த.வேலு தலைமை வகிக்கிறார். மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.

தியாகராயர் நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., 126வது வட்ட கழக செயலாளர் கோ.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட பிரதிநிதி டி.மோகன்ராஜ், இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன், வட்ட அவை தலைவர் ச. கல்விநாதன், வட்ட துணை செயலாளர்கள் தா.ஜான்சன், வெள்ளை மோ. சுரேஷ், துளசி வாசு, வட்ட பொருளாளர் உ.சரவணன், பகுதி பிரதிநிதிகள் எம்.கே. பாலாஜி, ப.சரவணன், க.ஆனந்த், மோ. கணபதி, மாணவர் அணி துணை அமைப்பாளர் ரா.சகாதேவன், கா.வேல்விழி ஆகியோர் வரவேற்கின்றனர்.

வட்டக் கழக செயலாளர் கோ.கண்ணன் அவர்களின் அண்ணன் மகன் திருமண வரவேற்பு விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து



கொண்டு மணமக்கள் ர.கணேஷ், 126-வது வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.பூஜாஸ்ரீ ஆகியோரை வாழ்த்துகிறார்.

இதில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்க பாண்டியன், கழக அமைப்பு இணைச்செயலாளர் அன்பகம் கலை, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன், துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமை நிலைய செயலாளர் - வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், 9-வது மண்டல குழு தலைவர் எஸ்.மதன் மோகன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள்,

மயிலை கிழக்கு/ மேற்கு பகுதி நிர்வாகிகள், மயிலை கிழக்கு/மேற்கு பகுதி வட்ட செயலாளர்கள், மயிலை பகுதி மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மயிலை கிழக்கு/மேற்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்,

மயிலை பகுதி அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மயிலை கிழக்கு/ மேற்கு பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மயிலை கிழக்கு மேற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், 126-வது வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்,

பகுதி பிரதிநிதிகள், மகளிர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்.

மாவட்ட பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள், வட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள், வட்ட இளைஞரணி, மாணவரணி, துணை அமைப்பாளர்கள், 126வது வட்ட அனைத்து நிர்வாகிகள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள், வட்ட இளைஞர் அணி கிளை மன்ற நிர்வாகிகள் மற்றும் கோ.கோபி, கு.பிரகாஷ், எஸ். பிரேம்குமார், வி.பிரபு, எஸ்.கந்தன், ரா.மகேந்திரன், எஸ்.ருத்துக்குமார், மீனவன் உணவகம் ஆர். ராஜேஷ், ர.கார்த்திக், ந. மகேந்திரன், எம்.எஸ்.லஷ்மிபதி, பி.பாலாஜி, எஸ்.யுவராஜ், ஆர்.ஆகாஷ், எ.மணிகண்டன், கே.கார்த்திக், பி. ஜெகன், சூரிய கண்ணன் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவலாங்காடு ஒன்றியத்தில் உள்ள என்.என் கண்டிகை ஊராட்சியில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் விஜயகுமாரி சரவணன் சொந்த நிதி 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய உயர் மின் கோபுரம்விளக்கை திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் கூளூர் ராஜேந்திரன், ஆர்த்தி ரவி, ஒன்றிய நிர்வாகிகள் காஞ்சி பாடி ஆர்.சரவணன், கமல், ஜெயராமன், சுஜாதா குமார், குப்பன், அர்ஜுனன், யுவராஜ், ஜானகிராமன், பரத், முரளி, உள்பட பலர் உள்ளனர்.